பதிவு எண்—M 5720.      வெள்ளிக் கிழமையில்      குருகுலத் தாள்

467

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர்: இளவழகனார்.

கிளை 6      தருதலம், மாம்பாக்கம்;      விசய, தை; 15—1—54      தளிர்-13

குருகுலத்தின் குறிக்கோள்:

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## போலிச் செல்வம்

அழகு சிறந்த தோகை மயிலைப் பார்த்து ஒரு வான் கோழி தானும் தனது பொல்லாச் சிறகை விரித்து ஆடியது என்று ஔவையார் ஒருபோலி நடனத்தை விளக்கினார்; ஒவ்வொன்றிலும் இப்படிப் போலிகள் இருந்து வருகின்றன; ஔவையார் கூறியது போலிக் கவிதைக்கு உவமை; போலிக் கல்வியைப் போலவே போலிச் செல்வமும் உண்டு. அதனையே இங்குத் திருவள்ளுவர் 'நடுவு இகந்து ஆம் ஆக்கம்' என்று தெரிவித்தார்.

போலிப் பொருள்கள், பார்வைக்கு உண்மைப் பொருள்களைப் போலவே தோற்றும். ஆனால் சில நாட்களில் அதன் சாயம் தெரிந்து விடும்; முதல் தோற்றத்தைப் பார்த்து ஏமாந்து விடக்கூடாது; நடுநிலைப்பண்பு கெட்டு உண்டாகும் செல்வங்கள் அத்தகையவை; அறிவும் குணமுங்கெட்ட மக்கள் தான் பெரிதும் ஏமாந்துபோய் அவற்றைக் கைக்கொள்வார்கள்; பின்னால், அதனால் ஆகும் துன்பங்களை ஏற்று வருந்துவார்கள்; அதன்பிறகு அச் செல்வத்தையும் இழந்து கெடுவார்கள்.

அறிவுடைமையும் ஆழமுடைமையும் நிலையாக ஏதொன்றையும் கவனிப்பதில் உள்ளன. அத்தகைய திறமையே ஒவ்வொருவர்க்கும் அழகு செய்வதாகும்.

போலி நலங்கள், நிலைப்பன அல்ல; தோற்றமாகக் காட்டி, நன்மை செய்வதுபோலக் காட்டி, விரைவில் மாறி அழிந்தொழியும். நிலைகெட்ட அதனை நம்புவதும் ஈடுபடுத்துவதும் அறிவுக்கு அழகாகுமா?

நிலையற்ற இவ்வுலக வாழ்க்கையில் நிலையுள்ளதைத் தேடிக் கொள்ள முயல்வதே நன்முயற்சியாகும்; ஒரு நேரத்துக்கு நன்மை தருகிறது என்று நடுவு இகந்து ஆம் ஆக்கத்தை நாடுதல் பொருந்துமா? அதனை அன்றே ஒழியவிடுதலல்லவா தகுதி!

நன்றே தரினும் நடுவிகந்தாம்
ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்.

நடுவு இகந்து ஆம் ஆக்கத்தை-நடுநிலைப்பண்பு கடத்தலால் உண்டாகும் வளத்தை, அன்றே ஒழிய விடல் - அப்பொழுதே ஒழிய விடுக!

செல்வம் நடுநிலைப் பண்பு கடத்தலால் உண்டாகும் என்று தோன்றினாலும், அதனால் இன்ன இன்ன நன்மைகள் உண்டாகும் என்று தோன்றினாலும், அப்பொழுதே உண்டாவதாகத் தெரிந்தாலும், அச் செல்வம் வேண்டாம் என்று ஆசிரியர் அறிவித்தார். அப்பொழுது நன்மை தருவதுபோல் தோன்றினாலும் பின்னால் பெருங்கேடு பயக்கும் என்பது கருத்தாயிற்று; பின் வரும் குறள்களால் ஈது உணர்த்தப்பட்டது.

நன்றே தரினும் என்னும் உம்மை எதிர் மறை; நன்மை தராது என்பதை உணர்த்திற்று; தீமையே பெரிதும் தரும் என்பது கருத்து; நன்மை தருவது போல் சிலர்க்குத்தோற்றுதலால் 'நன்றே தரினும்' என்று உடம்பட்டுக் கூறினார்.

அன்றே என்றார், அத் தீவினை தொடராமைப் பொருட்டு.

# "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
6-ம் ஆண்டுக் கையொப்பம்
(23-10-53 முதல்)

| | | | |
|---|---|---|---|
| உள் நாடு | ரூ. 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. 6 | 0 | 0 |
| தனித் தாள் | 0 | 1 | 0 |
| ஆயுள்— | | | |
| கையொப்பம் | ரூ. 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.


| கிளை | விசய, தை, | தளிர் |
|---|---|---|
| 6 | 15-1-54 வெள்ளி | 13 |


## தமிழ் ஆட்சி மொழி ஆவதில் தடை என்ன?

"சுவிட்சர்லாந்தில் ஒரு சிறுபான்மை "உரோமன்சு" நான்கு ஆட்சி மொழிகளுள் ஒன்றாகக் கருதப்படுவதன் தன்மையைச் சற்று உற்று நோக்க வேண்டும்.

அந் நாட்டு மக்கள் தொகையின் மொத்த எண்ணிக்கை 42, 66,000. இதில் "இலத்தீன்" மொழியிலிருந்து சிதைந்த "உரோமன்சு" மொழி ஒரு குறிப்பிட்ட சிறு நிலப்பகுதியில் தான் பேசப்படுகிறது.

பேசும் வகுப்பினருடைய எண்ணிக்கையோ 46,000 தான். மொத்த மக்கள் எண்ணிக்கையில் 100க்கு ஒன்று என்று கணக்கிடக்கூடிய நிலைமையில் உள்ள சிறு வகுப்பினருடைய மொழியும் அங்கே ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

நம்முடைய நாட்டில் மலையாள மொழி பேசும் மக்கள் ஏறக்குறைய 31,00,000 பேர்; கன்னட மொழி பேசும் மக்கள் 10,00,000 பேர் என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது.

பாகித்தானும் மக்களாட்சிக் கொள்கையை ஒப்புக்கொண்டு வங்காளத்தை ஆட்சி மொழியாகச் சேர்த்துக் கொள்ள முடிவு செய்திருக்கிறது.

எனவே, நம்முடைய நாட்டிலும் மக்களாட்சிக்கொள்கையின்படி தமிழ் ஆட்சி மொழியாக ஆக்கப்படவேண்டும். அதே நேரத்தில் சிறுபான்மை மக்களின் மொழியாகிய மலையாளமும் கன்னடமுங்கூட அவ்வப்பகுதியில் அரசாங்க மொழிகளாக ஒப்புக் கொள்ளப்படவேண்டும்.

தமிழை ஆட்சி மொழியாக ஆக்குவதற்குத் தடை எதுவும் இல்லை; இருந்தாலும் நீக்கப்பட வேண்டும். ஆட்சித் துறையிலும் மற்றத் துறைகளிலும் இன்று வழங்கப்பட்டு வரும் அவ்வத் துறை வேற்றுச் சொற்களுக்கு ஏற்ற சொற்கள் தமிழில் இல்லை என்று சொல்லப்படலாம்.

இயற்கை மொழியாய், எத்தகை புதுக் கருத்துக்களையும் ஏற்று அவற்றிற்கேற்ற சொற்களை வழங்கத்தக்க வேர்ச் சொற்களை நிரம்ப உடைய உயர்தனிச் செம்மொழியாய் உள்ள தமிழில் புதிய சொற்களை ஆக்கிக் கொள்வது எளிது. கடந்த 10-15 ஆண்டுகளில் எத்துணையோ வேற்றுச் சொற்கள் தமிழ் படுத்தப்பட்டு, பெருவழக்காக இன்று நாட்டில் நிலவுகின்றன. நம் முதலமைச்சர் இராசகோபாலாச்சாரியார் அவர்களே கூட முன் முறை அமைச்சராக இருந்த காலத்தில், கலைச் சொற்களைக் கூடிய மட்டும் நல்ல தமிழில் தொகுத்து வெளியிட்டிருக்கிறார்கள்.

சொற்கள் இல்லை என்பது ஒரு தடையே அல்ல; தமிழ்ப் பேரறிஞர்கள் பலர் காத்துக் கொண்டிருக்கிறார்கள், சொல்லாக்கப் பணியைத் திறம்படச் செய்து கொடுக்க.

தமிழர் திரு நாளாகிய பொங்கற் பெருநாளை ஒட்டித் தமிழர்களனைவரும் தம்முடைய தாய் மொழியை ஆட்சி மொழியாகக் காண உறுதி பூண்பார்களாக!

(தமிழ் நாட்டில் வந்த செய்தியைத் தழுவி எழுதப்பட்டது)

கு. ரா. ஆ.

## கடவுளைக் காணும் இடங்கள்!

1. தேவைகள் குறையும் இடம் தெய்வ இடம். —சாக்ரடிஸ்

2. மக்களிடையிலே கடவுளை நாடு. —நோவாலீஸ்

3. அயலார்க்கு நன்மை செய்யும் பொழுதுதான் ஆண்டவனைத் துதிப்பதாகக் கூறமுடியும். —சவனரோலா

4. நடமாடும் கோயில் நம்பர்க்கொன்று ஈயில் படமாடும் கோயில் பரமர்க்கதாகும். —திருமூலர்

5. கடவுளை அறிய, காண அவருடைய சிறு சிறு படைப்புகளே போதும். —பேக்கன்

6. குழந்தை இயல்புடையவர், எளிமையுடையவர், அன்பு செய்பவர், பிறர்க்கு மகிழ்வூட்டுபவர் இவர்கட்கே கடவுள் ஆட்சி. —ஸ்டீவன்சன்

# இந்திய சீன நட்பு

ஒத்த நிலைமையும் உணர்ச்சியும் உள்ளவர்களிடம் மட்டுமே நட்புணர்ச்சி இருக்க முடியும். அதிலும் நீண்டகால நட்புக்கு உணர்ச்சி திரியாத நிலை மிகவும் முதன்மை. இம் முறை மக்களுக்கேயன்றி நாடுகளுக்கும் பொருந்தும்.

இந்தியாவும் சீனமும் ஒத்த நிலையில் உள்ளவை. இவ்விரண்டும் பழைய நாடுகள். பழைய மொழிகளை உடையவை. பெரிய நிலப்பரப்புடையவை. மக்கள் தொகையும் மிக்குடையவை. தக்காரை அவ்வப்போதும் பெற்றெடுப்பவை. மேற்கத்திய நாடுகள் வளர்ச்சியுறாத காலத்திலேயே நாகரிகச் சிறப்புடன் வாழ்ந்தவை. அண்மையில் வேற்றவரின் தலையீட்டால் இவ்விரு நாடுகளும் நிலை தாழ்ந்தன. இன்று இவை வறுமையால் வருந்துகின்றன. இத் துன்பத்தைப் போக்கிக் கொள்ள உழைத்து வருகின்றன.

இவ்விரு நாட்டு மக்களின் உணர்ச்சிகளும் ஒத்தவையே. பிற நாடுகளை அடக்கியாண்டு தாமே சிறக்கவேண்டுமென்னும் நோக்கம் இவர்களுக்கில்லை. அமைதியையே இம்மக்கள் விரும்புகின்றனர். ஏறக்குறைய ஒரே காலத்தில் ஒரே வகையான உயர்வு தாழ்வுகளை இவர்கள் அடைந்திருப்பதால் இவர்களின் உணர்ச்சிகள் ஒன்றுபட்டுள்ளன

எனவே, இவ்விரு பெருநாடுகளும் பழங்காலம் தொட்டே நட்புடையவாய் விளங்குகின்றன.

“நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்பின்றி ஒல்லும்வாய் ஊன்றுநிலை” என்னும்படி, முடிந்தவரை ஒன்றனுக்கொன்று தாங்கிக்கொள்ளும் தன்மையும் இந் நாடுகளிடையே காணப்படுகின்றது. சீனம், ‘விடுதலை’ அடைந்து, உலக மக்களில் நான்கில் ஒரு கூறுடைய தனிப்பெரு நாடாக விளங்கியும், கூட்டுநாட்டமைப்பில் இடம் கொடுக்கப்படவில்லை. இப் பெருந் தொகையினருக்கு உலக அவையில் இடமில்லை என்பது தவறாகும். இதை எடுத்துக்காட்டிச் சீனத்துக்குரிய இடத்தைக் கொடுக்கவேண்டுமென்று இந்தியா வாதிட்டு வருகிறது.

சீன மக்கள் இந்தியாவில் தோன்றிய ஒரு சமயத்தைச் சேர்ந்தவர்களாய் இருப்பதோடு, இந்திய நட்புணர்ச்சியைப் போற்றிக் கொள்கின்றனர்.

இவ்விரு நாடுகளும் ஒன்றனுக்கொன்று தமது கலைத் தூதுக் குழுவினரை அனுப்பித் தமக்குள்ள நட்புணர்ச்சியை மேலும் வளர்த்துக் கொண்டன. பொருள் மட்டும் நிறைய இருப்பதைவிட நல்ல நட்பிருப்பது சிறந்தது. இவ்விரு நாடுகளும் இன்று ஏழைமையுடையவேனும் பழைய, தூய நட்புடையவாய் இருப்பது நமக்கு மகிழ்ச்சியையும் வன்மையையும் தருகின்றது. ஐயமும் போர்க்கவலையும் நிறைந்துள்ள இந்நாளில் இப்படிப்பட்ட நட்பே அமைதியும் நன்மையில் நம்பிக்கையும் தரவல்லது. அதனாலேயே சென்ற மாதம் 29-ம் நாள் சென்னைக்கு வந்திருந்த சீனக் கலைத்தூதுக் குழுவின் தலைவர் திரு. டிங்- சி- லிங். பின்வருமாறு கூறினார். “நம் இரு நாட்டு மக்களும் ஒன்றுபட்டு, தோளொடு தோளாய் உழைக்கும் வரை, 90 கோடி மக்களின் எண்ணமும், வலிவும், ஆசியாவின் அமைதிக்கு உரமான காப்பாக இருக்கும் என்று நான் உறுதியாய் நம்புகிறேன்”

இந்திய சீன மக்களின் தொகை சிறிது குறைய உலக மக்களின் தொகையில் பாதியாக உள்ளது. அமைதியை விரும்பும் இப் பெருந் தொகையினரின் எண்ணம், அமைதியைக் கெடுத்து அல்லற் படுத்தும் அணுக்குண்டுடைய சிறுபான்மையினரின் எண்ணத்தைவிட வன்மையுடையதாக இருக்கவும் கூடுமல்லவா? எனவே திரு- டிங்- சி-லிங் நம்புவதைப்போலவே. இவ்விருநாட்டு நட்பின் நன்மையில் நம்பிக்கை கொள்வோமாக!

ஆழச் சென்றுகொண்டே இருக்கும் இந்நட்புக்குச் சென்னை சிறந்த பரிசளித்தது! அவை, ஆடலரசர் திருவுரு, திருக்குறள் நூல் ஆகிய பரிசுகளாகும். சீனக் கலைக் குழுவினருக்கு இந்திய நாடு அளிக்கக் கூடிய பரிசுகளில் இவற்றினும் சிறந்தவை கிடைப்பதரிது.

வாழிய சீனம்!
வாழிய இந்திய சீன நட்பு!!

—மெய்கண்டான்.

Telegrams: "RAMBROS"

**N. Ramu Bros;**

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

## சமாஜ விழா

(முன் தொடர்ச்சி)

அண்மையில் 1953 டிசம்பர் 25, 26, 27, தேதிகளில் அச் சமாஜத்தின் 48 ஆம் ஆண்டு நிறைவை ஒட்டி நம் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் இளமை முதல் இருந்து தொண்டாற்றிய இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையில், அவர்கள் பெயரால் ஒரு மணி மண்டபம் எழுப்ப விரும்பும் இடத்தில் முறையே சைவர் மாநாடு,சைவ மங்கையர் மாநாடு, சைவ இளைஞர் மாநாடுகள் நடைபெற்றன.

அவற்றுக்கு முறையே ஈழ நாட்டைச் சேர்ந்த யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை வழக்கறிஞர் திரு வே. நாகலிங்கம் பிள்ளை G P U M. அவர்களும், சென்னை A. R. C. பெண்கள் உயர்பள்ளித் தலைமை ஆசிரியை திருமதி. மரகதவல்லி சிவபூஷணம் BABT அவர்களும், பச்சையப்பன் கல்லூரித் தத்துவப் பேராசிரியர், டாக்டர், V A தேவசேனபதி அவர்களும் தலைமை தாங்கிச் சிறப்பித்திருக்கிறார்கள்.

25-12-53 அன்று காலை இராயப்பேட்டை சுந்தரேசர் கோயிலில் வழிபாடும், திருவெம்பாவை வெளியீடும் நடந்தன. அங்கிருந்து மாநாட்டுத் தலைவர்கள் மேள வாத்தியங்களோடு ஊர்வலமாக மாநாட்டுப் பந்தலுக்கு அழைத்துவரப்பட்டனர். சமாஜத் தலைவர் நல். முருகேச முதலியார் அவர்கள் வரவேற்புரை வழங்கினார்கள்.தம் வரவேற்புரையில் அவர்கள் சமய வளர்ச்சிக்காகச் செய்யத் தக்க பல அரிய செயல்களை எண்ணித் தொகுத்துத் தெரிவித்தார்கள்.

சைவர் மாநாட்டுத் தலைவரவர்கள் தம் தலைமை உரையில் ஈழ நாட்டுக்கும் தமிழ் நாட்டுக்கும் உள்ள நெடுங்காலத் தொடர்பு, சைவத்தின் பழமை, பெருமை, அம்மையப்பர் வழிபாட்டின் அருமை, இல்லறம், துறவறம், சமயத்தின் தற்கால நிலை, அதற்குச் செய்யவேண்டிய தொண்டு முதலியவைகள் பற்றி எல்லாம் விரித்துக் கூறினார்கள்.

மங்கையர் மாநாட்டுத் தலைவியார், சமய வாழ்வின் இன்றியமையாமை, சைவத்தின் தொன்மை, சிறப்பு, சமரசம், சைவர் கடமை, சிறப்பாகச் சைவ மங்கையர் கடமை,சைவப் பாதுகாப்பு. சிறுதுளி பெருவெள்ளமாக எவரும் மேற்கொள்ளத்தக்க கட்டுப்பாடான தொண்டுகள் வழிகள் பற்றி எல்லாம் தெரிவித்தார்கள்.

இளைஞர் மாநாட்டுத் தலைவர் இளமைச் செல்வம், அதனைப் பயன்படுத்தும் முறை, அகவுலக இமயம், அதனை வெற்றி கொள்ள வேண்டிய கட்டாயம், சமயப் பற்று, சமய இணக்கம், அதன் இன்றியமையாமை, மன்பதைத் தொண்டு, சமய சின்னங்களின் கருத்தும் சிறப்பும், செய்தவச் சிறப்பு, விடுதலை உரிமை என்பவற்றின் உண்மைப் பொருள், புதுமை வேட்கை, அறியாமை வறுமை நோய் துன்பம் இவற்றை ஒழிக்கும் புரட்சிப்போர் பற்றி எல்லாம் சுருக்க விளக்கமாகத் தெளிவு செய்தார்கள்.

முதல் நாள் 25-12-53 அன்று மாலை சைவர் மாநாட்டில், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் திரு. வெள்ளைவாரணனார் 'திருமுறைகளும் சிவநெறியும்' என்பது பற்றியும்,திரு. மா. பாலசுப்பிரமணிய முதலியார் B. A., B L, அவர்கள் 'அகந்தைக் கிழங்கை அகழ்ந்து எடுத்தல்' என்பது பற்றியும், காஞ்சிபுரம் சித்தாந்த சிகாமணி திரு கா. வச்சிரவேல் முதலியார் B A, L. T. அவர்கள் 'சைவசித்தாந்தமும் அதன் நடைமுறை மெய்ம்மையும்' என்பது பற்றியும் முறையே ஆராய்ச்சித் திறனும் இலக்கிய நுட்பங்களும் தெளிவும் தோன்ற விரிவுரை நிகழ்த்தினார்கள். அகந்தைக் கிழங்கு பற்றிய பேச்சு அப்படியே எழுதப்பட்டுப் பேசப்பட்டது. மற்றவர்கள் பேச்சுகளுங் கூட எழுதப்பட்டு எல்லாம் 'சித்தாந்தத்தில்' வெளிப்படுத்தப்பட்டால் சமாஜ உறுப்பினர்கட்கு அவை மிகவும் பயன் செய்யும்.

இனி, 26-12-53 அன்று முற்பகலில் கிறித்தவக் கல்லூரிப் பேராசிரியர் திரு. பூ. ஆலாலசுந்தரனார் M. A. அவர்கள் சைவ சமய வளர்ச்சி பற்றிச் சீர்திருத்தக் கருத்துக்கள் பொதிந்த உணர்ச்சி மிக்க ஒரு சொற்பொழிவை உதவினார்கள். திரு. ரா. சண்முக சுந்தரம் செட்டியார் அவர்கள் 'திருவெம்பாவை' பற்றிச் சத்தியை வியந்தது என்னும் உள்ளுறைகளை விளக்கிப் பேசினார்கள். பின்னர், பாம்பன் அடிகளைப்பற்றித் திருப்புகழ் சதுரர் திரு. சே. த இராமலிங்கம் பிள்ளை BABT அவர்கள் விரிவுரை செய்தார்கள்.

பிற்பகல் சைவ மங்கையர் மாநாட்டில் திருமதி. சரசுவதியம்மையார் சங்ககாலப் பெண்மணிகள்பற்றி வகைப்படுத்தி விரித்துப் பேசினார்கள். 'குகப் பிரியை' அவர்கள் 'சமயமும் வாழ்க்கையும்' என்பது பற்றி இசை நலம் தோன்றப் பேசி மகிழ்வித்தார்கள்.

27-12-53 அன்று மாலை இளைஞர் மாநாட்டில் உண்மை விளக்கம் பற்றிப் பேசிய குருகுல மாணவர் திரு முத்துசாமி அவர்கள் ஐந்தெழுத்தின் பெருமை,யைத் தமிழ் முறையில் இனிது விளக்கினார்கள். 'சமயமும் வாழ்வும்' என்பது பற்றிப் பேசிய அம்பை R. சங்கரன் இக்காலச் சைவ இளைஞர் உள்ளங்களை ஓரளவு எடுத்துக் காட்டிச் சமயப் பெரியோர் கடமைகளை வற்புறுத்தினார்.

'சமாஜமும் இளைஞரும்' என்ற தலைப்பில் பேசிய புலவர் முருகவேள் B. O. L., அவர்கள், சைவப் பெரியோர்கள் ஒவ்வொருவரும் தமக்குப் பின் தம்மைப் போலவே விளங்கத் தக்க ஒவ்வொரு ஞானப் புதல்வரையேனும் பழக்கவேண்டும் என்றும், சித்தாந்த சாத்திரங்களை விளக்கி விரிவுரைகள் செய்விப்பது போலச் சமாஜக் கூட்டங்களில் திருமுறைகளைப் பெரிய இசைவாணர்களைக் கொண்டு இசைத்துக் காட்டி மக்களைப் பத்தி நெறியிற் செலுத்திவரவேண்டும் என்றும், ஆங்கிலந் தெரிந்த சித்தாந்தம் வல்ல அறிஞர்களைக் கொண்டு, ஆங்கிலப் போசிரியர்களில் யார் யார் சைவ சித்தாந்த உண்மைகளை ஒட்டி என்ன என்ன நூல்கள் எழுதியிருக்கிறார்கள் என்று அவர்கள் அறிந்தவரை பட்டி தொகுத்து அந்நூல்களையும் கூடுமான அளவு தொகுத்து சமாஜ இடத்தில் பலருக்கும் பயன்பட வைக்க வேண்டும் என்றும் வற்புறுத்தினார்கள்.

பிற்பகலில் கந்தாநுபூதி பற்றித் திரு கி. வா. ஜகந்நாதய்யர் B O L, அவர்கள், அழகாகப் பேசி மகிழ்வித்தார்கள். அவர்கட்கு முன்னால் பேசிய தமிழ்ப் பெருமகனார் திரு. இராமலிங்க முதலியார் M A அவர்கள் சமய உணர்ச்சி வேண்டும் என்பதை அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளில் வைத்து விளக்கி வற்புறுத்தினார்கள். இறுதியாக 'ஒழுக்க அமை அணி' என்பது பற்றிப் பேசி திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் நல்ல அறிவுரைகளை வழங்கினார்கள்.

இறுதியாகச் சமாஜச் செயலாளர் திரு. ச. சிவகுமாரன் அவர்கள் நன்றிகூற விழா இனிது முடிந்தது.

கூட்டங்களின்போது இடையிடையே திருமுருக விசாக நம்பி, திரு. புண்ணியகோடி என்னும் இளைஞர்கள் திருமுறைப் பாடல்களைப் பாடி அனைவரையும் மகிழ்வித்தார்கள்.

விழாவிற்கு வந்திருந்த தலைவர்களும் அறிஞர்களும் வெளியூர் அன்பர்கள் பலரும் தங்கவும் உணவுகொள்ளவும், மழை நேரங்களில் கூட்டத்தை நடத்திக் கொள்ளவும் நம் குருகுலச் செல்வியார் சிவத்திரு. வள்ளியம்மையார் உறவினர்களாகிய திருவாளர்கள் குப்புசாமி முதலியார் பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் லாயிட் ரோடிலுள்ள 'சரவண பவனம்' என்னும் தம் மாளிகையைக் கொடுத்து உதவினார்கள். வாலாஜாபாத் இந்து மத பாடசாலை வள்ளலார் இல்லத்து மாணவர்கள் சிறந்த பல தொண்டுகளை(உணவு வட்டித்தல், கூட்டங்களில் பணி செய்தல், ஊர்வலத்தில் தொண்டு முதலியவற்றைச்) செய்ததோடு இறுதி நாளில் இடை வேளையில் தம் பாட்டு, பேச்சு, நடிப்பு, உடற்பயிற்சி முதலியவற்றாலும் எல்லோருக்கும் இன்பமூட்டினார்கள்.

ருக்மணி குக்கர் திரு. அ. சோமசுந்தரம் செட்டியார் M A அவர்கள் உணவுக்கென ரூ 300 நன்கொடை கொடுத்து சமாஜத்தார்க்கு ஊக்க மூட்டினார்கள். அத் தொகையைப் பெற்றுக் கொண்டு அதற்குமேலும் சில மடங்கு தொகையைச் செலவிட்டுத் திருவாளர்கள் வாலாஜாபாத் வா. தி. மாசிலாமணி முதலியார் அவர்களும், மாணிக்கம் செட்டியார் அவர்களும், திருமயிலை சந்தன்மல் சவுக்கார் அவர்கள் உதவியோடு மூன்று நாளும் நூற்றுக்கணக்கானவர்களுக்குத் திருவமுது செய்வித்து மாநாட்டையும் உடனிருந்து சிறப்புற நடத்தி வைத்தார்கள்.

சமாஜத்தின் அடுத்த மாநாட்டை விருதுநகரில் நடத்த வேண்டும் என்றும், செலவைத் தாம்ஏற்றுச்சிறப்புறச்செய்வதாகவும் அந்நகர் மாதர் கழகத்தின் சார்பில் திருமதி. தில்லைக்காமாட்சி அம்மையார் அவர்கள் கடிதம் எழுதியிருந்தார்கள்.

மாநாடு வெறும் பேச்சு மாநாடாக முடியாமல் சமாஜத்தின் 50 ஆம் ஆண்டு நிறைவுப் பொன் விழாவை 1955-ல் சிதம்பரத்தில் சிறப்பாகக் கொண்டாடவும், அதற்குள் சமாஜத்திற்கு என ஒரு நல்ல கட்டிடம் கட்டிக் கொள்ளவும் 'சித்தாந்த' இதழைத் திறம்பட நடத்திப் பரப்பவும் இளைஞர் பலரை ஊக்கிச் சமயத் தொண்டை மேற்கொள்ளுமாறு செய்யவும், தக்க சூழ்நிலைகள் சமாஜ உறுப்பினர்கள் கூட்டத்தில் அடிகோலப்பட்டன.

திரு. வி. க. மணி மண்டப முயற்சிக்கும் மாநாட்டில் நல்ல ஊக்கம் ஊட்டப்பட்டது. அடிக்கடி மனமழியின் இடையீடும், சென்னையில் கண்காட்சிகள், இசை நாடகக் கவர்ச்சிகள், அரசியல் கூட்டங்கள் முதலிய வேறு பல பெரு நிகழ்ச்சிகள் இருந்துங்கூடச் சமாஜ நிகழ்ச்சிகள் வெற்றிகரமாக நிறைவேறியதைப் பார்க்கும்போது மக்களுக்குள் சமய உணர்ச்சி மங்கிவிடவில்லை, அவ்வுணர்ச்சிக்குத் தக்க விருந்தும் ஊக்கமும் கொடுத்தால் சலியாமலும் தளராமலும் காலத்திற்கு ஏற்ற சீர்திருத்தங்களைச் சமயத் துறையில் நுழைக்கத் தயங்காமலும் தக்கபடி கடமைகளைச் செய்தால், மீண்டும் மக்கள்பால் நல்ல சமய உணர்ச்சி கிளர்ந்தெழுந்து நிலைக்கும் என்கிற உறுதி உண்டாயிற்று.

வாழ்க தமிழ்!
விளங்குக சைவம்!!
வெல்க சமாஜம்!!!

# பெரிய புராணப் பேருரை வெளியீட்டு நிறைவு விழா

மெய்யன்புடையீர்!

கோவைமா நகரத்துச் சிறந்த அறிஞரும், சைவப் பெருந்தகையாளருமாகிய, சிவக்கவிமணி, உயர் திரு C.K. சுப்பிரமணிய முதலியார் B. A. அவர்கள், ஏறக்குறைய 50-ஆண்டுகளாக அரிய ஆராய்ச்சிகள் செய்து பெருமுயற்சியுடன் வெளியிட்டுவரும் பெரிய புராணப் பேருரை வெளியீடானது அண்மையில் நிறைவாகின்றது. அந்தச் சிறப்பினைத் தக்க முறையில் நிறைவேற்றிக் கொண்டாட வேண்டும் என்பது நாட்டுப் பெருமக்களின் உண்மைகெழுமிய கோரிக்கை ஆகும்.

இந்த நற்பணியை முன்னிட்டுக் கோவைத் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் 1953-ம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 25-ம் நாள் மாலை 6-30 மணிக்கு நகரப் பெரியார் திரு. C. S. இரத்தினசபாபதி முதலியார் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் கூட்டப்பட்டது. அது போழ்து அடியிற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தீர்மானங்கள்:—

1. பெரிய புராணப் பேருரையின் நிறைவேற்று விழாவைச் சிதம்பரத்தில் அடுத்த சித்திரைத் திங்களுக்கு முன்பாகத் தக்க முறையில், கொண்டாட வேண்டியதென்று தீர்மானிக்கப்பட்டது.

2. அதற்காக அடியிற்கண்ட கனவான்கள் செயற்குழுவினராகத் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

**அருள் ஆணையாளர்கள்:**

1. ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானங்கள், திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை.
2. ,, மகா சந்நிதானங்கள், தருமபுர ஆதீனம், தருமபுரம்.
3. ,, மகாசந்நிதானங்கள், திருஞானசம்பந்த சுவாமிகள் மடாலயம், மதுரை.
4. ,, மகாசந்நிதானங்கள், திருவண்ணாமலை ஆதீனம், குன்றக்குடி.
5. ஸ்ரீமத் காசிவாசி அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள், ஸ்ரீகாசிமடம் அதிபர், திருப்பனந்தாள்.

**புரவலர்கள்:**

திரு ராஜா. சர். M. A. முத்தையா செட்டியார் அவர்கள், சென்னை
,, டாக்டர், சர், A. இலட்சுமணசுவாமி முதலியார் ,, ,,
,, ,, C. P. இராமசாமி ஐயர் அவர்கள், அண்ணாமலை நகர்.
,, சர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள், அமைச்சர், கொழும்பு.
உயர்திரு நடேசம் பிள்ளை அவர்கள், அமைச்சர். கொழும்பு.

**தலைவர்:**

சர். பி. டி. ராஜன் அவர்கள்; Bar-at Law மதுரை.

**துணைத் தலைவர்கள்:**

திரு. S சுப்பராய முதலியார் அவர்கள், சீர்காழி.
,, V. S தியாகராச முதலியார் அவர்கள் M. A., வடபாதி மங்கலம்.
திவான்பகதூர் C. S. இரத்தினசபாபதி முதலியார் அவர்கள், கோவை.

திரு A இராமசாமிநாயுடு அவர்கள் முன்னாள் மேயர், சென்னை.
" T. S. அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்கள், B A.,B.L.,M.P.
தலைவர் சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகம்.
ஸ்ரீ இராமகிருஷ்ண வித்யாலயம்

செயலாளர்:

திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார், அவர்கள், B.A.B.L., கோவை.

துணைச் செயலாளர்:

துடிசைகிழார் திரு. A. சிதம்பரமுதலியார் அவர்கள்
(Retd. Inspector of police) கோவை

பொருட்காப்பாளர்:

திரு M. S. பழனியப்ப முதலியார் அவர்கள் B A. இராஜ வீதி, கோவை.

உறுப்பினர்கள்:

பேராசிரியர் திரு. A. இராமநாதம் பிள்ளை அவர்கள், M. A.
அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சென்னை.
திரு. S. அரங்கசாமி முதலியார் அவர்கள், B. A., பழனி.
" S. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள், B. A. L. T. சென்னை.
T. P. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் M. A. B. L. M. O. L. சென்னை.
டாக்டர் திரு. மு வரதராசனார் அவர்கள், M.O.L., ph D., சென்னை
பேராசிரியர் திரு. R.P. சேதுப் பிள்ளை அவர்கள், B.A..B.L., சென்னை.
திரு. T.M. நாராயணசாமி பிள்ளை அவர்கள் M. L. C., திரிசிரபுரம்.
திருமதி. E. T. இராசேச்சுவரி அம்மையார் M.A., L.T
திரு. T. R. சுந்தரம் பிள்ளை அவர்கள் B.A, B.L.,. கோவை.
திருமதி. புஷ்பம் நடராச நாடார் அவர்கள், சிவகாசி.
திரு. டாக்டர் C. நஞ்சப்பா அவர்கள் முன் நகராட்சித் தலைவர், கோவை
திரு. R. V. கிருஷ்ணய்யர் அவர்கள B.A., B.L., M.L.C. சென்னை
திரு. V. C. சுப்பைய கவுண்டர் அவர்கள், மில் அதிபர் வெள்ளக்கிணறு.
திரு. B. முத்துக்குமாரசாமி முதலியார் அவர்கள் கோவை.
மேடை தளவாய் திரு. M. D. T. குமாரசாமி முதலியார் அவர்கள்;
பெருநிலக்கிழார் திருநெல்வேலி.
திரு. K. கைலாசம் பிள்ளை அவர்கள், நிலக்கிழார், மாயூரம்.
டாக்டர் திரு. M. ராஜமாணிக்கம் அவர்கள் M. O. L. Ph. D.
டாக்டர் திரு. A. சிதம்பரநாத செட்டியார் M. A. Ph. D.
திரு. கரு முத்து தியாகராச செட்டியார் அவர்கள், மதுரை.
தமிழ்ப் புரவலர் திரு மெய்யப்ப செட்டியார் அவர்கள் திருவையாறு.
திரு. A.L. V. நடராசன் செட்டியார் அவர்கள், கோயம்புத்தூர்
திரு. M. T. குழந்தைவேல் செட்டியார் அவர்கள், சீர்காழி.
திரு. B. வைத்தியலிங்க முதலியார் அவர்கள், குளித்தலை.
திரு. பழனியப்ப முதலியார் அவர்கள்
அப்பர் தேவாரப் பாடசாலை, சிதம்பரம்.
திரு. S. தருமலிங்க முதலியார் அவர்கள், மதுரை.

இவர்களோடு இன்னும் கனவான்களைச் சேர்த்துக் கொள்ள அதிகாரமுண்டு. மேலேகண்ட நடவடிக்கைகள் பொது மக்கட்குத் தெரிவிக்கப்படுகின்றன. பொது மக்கள் இது சம்பந்தமாகத் தங்களால் ஆன அன்பு கூர்ந்த உதவிகளைப் புரியும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

அன்பன்,
C. M. இராமச்சந்திரஞ் செட்டியார்.

## உயர்ந்த பிரார்த்தனை!

1. ஒவ்வொரு புனிதமான விருப்பமும் கடவுட் பிரார்த்தனையே. —ஹூக்கர்

௨. 'இதுவேண்டும்' என்று குறிப்பிடாமல் தொழுவதே உயர்ந்த 'பிரார்த்தனை'; நமக்கு நன்மை எது என்பதைக் கடவுள் நன்கு அறிவார். —சாக்ரடீஸ்

3. வானுலக வாழ்வு கேளாமலே கிடைக்கும்; கடவுளை கேட்டால்தான் கிட்டுவர்.

—இலவல்

4. கேட்டுப் பிரார்த்தித்தால் கேட்டது மட்டுமே பெறுவோம்; கேளாமல் பிரார்த்தித்தால் கேட்டிருக்க வேண்டியதைப் பெறுவோம்.

—இலேய்ட்டன்

**Phone. 55034. Tel. Enkayam**

**கைத்தறி ஆடைகளில் சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட்மார்க்**

**பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்**

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
53 கிடங்குத் தெரு, சென்னை 1.

# அமிழ்தம் உண்டாக!

(ந. ரா. ஆடலரசு)

‘அறிவுலகத்திலே’ இயல் இசை நாடகம் என்னும் ‘முந்நீரும்’ கலந்த தமிழ், பல கடல்களாகப் பரவி இருக்கின்றது. அப் பல கடல்களுள் சமயத் தொடர்பான நூல்களை யெல்லாம் ‘அருளறிவு’ அல்லது ‘மெய்யுணர்’வாகிய ‘திருமால்’ உறையும் ‘பாற்கட’லாகக் கொள்ளலாம். அப் பாற்கடலில் இக்கால நல்லோர் சிலர் ‘பகுத்தறிவு’ என்னும் ‘மந்தர மலை’யை நாட்டி ஆராய்ச்சி என்னும் ‘வாசுகி’யைக் கொண்டு கடையமுற்பட்டனர். மெய்யுணர்வாகிய திருமால் ‘விளங்காமை’ என்னும் ‘ஆமை’ யாகி ஆழத்தில் சென்று பகுத்தறிவைத் தாங்கத் தொடங்கி விட்டார்.

கடைய முற்பட்ட நல்லோர்க்குக் கிடைத்தது, பழைய கதையில் தேவர்களுக்குக் கிடைத்தது போன்று ஆராய்ச்சிப் பாம்பின் ‘வால்’ பகுதிதான். அதன் தலைப் பகுதியைச் சமயத் தலைவர்கள் என்று கருதப் பெறுபவர்கள் பற்றிக் கொண்டு அழுக்கினார்கள். அதாவது ஆராய்ச்சிப் பாம்பை உயிர்க்காதபடி செய்தார்கள். ‘குரு’ என்னும் மழமழப்பான கம்பத்தைச் சுற்றிக் கொண்டு இயங்க வேண்டிய ‘ஆராய்ச்சிப் பாம்பு வெறும் ‘பகுத்தறிவு’ என்னும் கரடு முரடான மலையைச் சுற்றிக்கொண்டு இயங்கியதோடு, மேலே குறிப்பிட்டபடி இருசாராராலும் கொடுமையாகப் பற்றி இழுக்கப்பட்டதாய் வேதனை தாளமாட்டாமல் தன்னிடத்திலிருந்து ‘திரிபு’ என்னும் நஞ்சைக் கக்கிவிட்டது. தலைப் பக்கம் இருந்தவர்கள் அந்நஞ்சின் கொடுமையை ஆற்றாது அல்லலுறுகின்றனர். இந்நிலையில் பழைய கதையிற் போல இங்கும் ‘ஐயம்’ என்னும் ‘ஆலகாலவிடம்’ தோன்றி அனைவரையும் அலைக் கழிக்கத் தொடங்கிவிட்டது.

‘நல் வாழ்க்கை’ என்னும் அமுதத்தைக்காணலாம் என்று முன் வந்து வேலை செய்து, வால் பக்கம் பிடித்த தேவர்கள், இந்தக் கடலும் வேண்டாம் இதில் அமுதமும் இல்லை என்று தமக்குத் தோன்றியபடி யெல்லாம் மருண்டு ஓடிவிட்டார்கள். அவர்கள் ஓடினாலும் அவர்களால் எழுப்பிவிடப்பட்ட விடங்கள் அவர்களை விடுவதாக இல்லை. எங்கும் பரவும் விடத்துக்கு முன் அவர்கள் எங்கே தான் ஓடிவிட முடியும்; ஓடி ஓடி என்றைக் கிருந்தாலும் வந்த விடத்தை அயன்று, மீண்டும் போய்க் கடலைக் கடையுங்கள் அமிழ்தம் உண்டாகும் என்று அறிவுறுத்தத்தக்க தலைவர் யார் என்று அறிந்து அவரை அடுத்துத் தானே ஆகவேண்டும்; இப்போதைக்குப் ‘பாவம்’ அவர்களுக்கும் சரி, அவர்களுக்கு எதிர்ப் பக்கத்தில் இருந்து வேலை செய்தவர்களுக்கும் சரி, அந்தத் தலைவரை உணரும் தகுதி இன்னும் வரவில்லை, வரும். இனி, முன்னால் ஓடிய சிலபேர் ‘ஆசிரியர் மறைமலை அடிகள்’ என்னும் சிவபிரானிடம் சென்று முறையிட்டார்கள். அவரை அடுத்திருந்த ‘திரு. வி. கலியாண சுந்தரனார்’ என்னும் ‘ஆலால சுந்தரனார்’ நஞ்சை எல்லாம் தம் கைக்குள் அடக்கிக் கொண்டு வந்து கொடுத்தார். அதைப் பயின்று அல்லல்போக்க முற்பட்டபோது ‘சூழ் நிலை’ என்னும் அம்மையார் வந்து கண்டத்தைப் பிடித்து அதில் கறையையும் உண்டாக்கி விட்டாள் என்றாலும் நஞ்சு அடக்கப்பட்டுவிட்டது. உடனிருந்து கண்டவர்கள் மகிழ்ச்சியும் உருக்கமும் கொண்டார்கள். இன்னும் உருகிக்கொண்டிருக்கிறார்கள்; எங்கெங்கோ ஓடிவிட்ட மற்றவர்களும் மருட்சி நீங்கித் திரும்பி வரவேண்டும், வந்து இந்தத் திருநீல கண்டத்தைக் காணவேண்டும்; கண்டு மகிழ்ந்து உருக வேண்டும் என்று விழைகிறார்கள். தலைப்பக்கம் இருந்து பாம்பின் நஞ்சுக்கும் ஆட்பட்டவர்களோ இன்னும் மயக்கம் தெளியக் காணோம். அவர்களும் மயக்கம் தெளிந்து மற்றவர்களும் மருட்சி நீங்கி எல்லோரும் ஒன்றுபட்டு உண்மை நிலைகளை அறிந்து மீண்டும் சமயப் பாற்கடலைத் தக்கபடி கடைந்தால் ‘நல்வாழ்க்கை’ என்னும் ‘அமிழ்த’மும் இன்னும் பல அருமையான நலங்களும் தோன்றும் என்பது உறுதி.

இருசாராரும் தகுதியான முறையில் ஒருவரை ஒருவர் ஐயமுந் திரிபும் கொள்ளாமல் ஒன்றுபட்டு முயல்வார்களா?

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்; இ. சு. பாலசுந்தரம் குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்.)